# ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

## கைக்கூலி கைவிட்டோர் கழகம்

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

**பத்திரிக்கைச் செய்தி** நாள் : 11.10.2021

திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி **கைக்கூலி கைவிட்டோர் கழகம் மற்றும் பூனாம்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி** இணைந்து நடத்திய **சர்வதேச பெண்குழந்தைகள் தின விழா (International Girl Child Day Celebration)** 11.10.2021 இன்று சமூக இடைவெளியைப் பின்பற்றி நடைபெற்றது.

**பூனாம்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி** வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் **பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு நா.பெ. முருகேசன்** தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக **ஜமால் முகமது கல்லூரி, வேதியியல் துறை இணைப்பேராசிரியர் மு. செய்யது அலி பாதுஷா** கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அவர்தம் உரையில், பெண் குழந்தைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். பெண் குழந்தைப் பிறப்பைத் தடுப்பது ஒரு மன்னிக்க முடியாத ஒரு மாபெரும் குற்றம் என்று சாடி, பெண் குழந்தைப் பிறப்பை மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும் என்றார். பெண்களுக்குச் சம உரிமையும், மதிப்பும் கொடுக்கப்பட வேண்டும் எனவும், பெண் கல்வியே சமுதாய முன்னேற்றத்திற்குச் சிறந்த வழி எனும் மகாகவி பாரதியின் கருத்தினை மேற்கோளாகச் சுட்டினார். பெண்கள் கல்வி பெற்று அனைத்து துறைகளிலும் சிறப்பாகப் பணியாற்றி வெற்றி நடைபோட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

பள்ளி மாணவ, மாணவியருக்கு "பெண்குழந்தைகள் கடவுள் எழுதிய கவிதை", "பெண்குழந்தைகள் சுமையல்ல சுமை தாங்கி" எனும் தலைப்புகளில் கவிதைப் போட்டியும் "மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்மம்மா", "தையலை உயர்வு செய்" ஆகிய தலைப்புகளில் பேச்சுப் போட்டியும் நடத்தப்பட்டு வெற்றிபெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகளும், கலந்து கொண்டவர்களுக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன. பேச்சுப்போட்டியில் கோ. பிரபாவதி முதல் இடத்தையும், சா. மீரா இரண்டாவது இடத்தையும், பெ. ஸ்ரீமுகேஷ் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

கவிதைப் போட்டியில் மு.ரேகா முதல் பரிசையும், த.காவ்யா இரண்டாம் பரிசினையும், ரா. கோகுல் நாத் மூன்றாம் பரிசினையும் பெற்றனர். நா. காஜேந்திரன், சி. லோகபிரியா, ச. யோகலெட்சுமி, பெ. மதன், டி.ஸ்ரீதர் ஆகியோர் ஆறுதல் பரிசினைப் பெற்றனர்.

இந்நிகழ்வில் பகுதி 5 ன் ஒருங்கிணைப்பாளர் **எஸ். ஷேக் இஸ்மாயில்,** தண்ணீர் சுற்றுச்சூழல் மாணவர் மன்ற ஆலோசகர் இணைப்பேராசிரியர் த. செல்வராசு, பூனாம்பாளையம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு. இராஜ மாணிக்கம், அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். கைக்கூலி கைவிட்டோர் கழக ஆலோசகர் முனைவர் S. நாகூர்கனி விழாவின் நோக்கவுரையாற்ற, பள்ளியின் கணித ஆசிரியை திருமதி து. உஷா ராணி, வரவேற்புரையாற்றினார். பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கைக்கூலி கைவிட்டோர் கழக மாணவர்கள் மு. அஹமது ஹூசைன் நவ்பல், ம. இம்ரான் கலீல், உ. உஸ்மான் அஹமது, வ. சுல்தான் அசதுல்லா, முகிலன் ஆகியோர் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர்.

முதல்வர்




பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவருக்குப் பரிசு வழங்குகிறார் சிறப்பு விருந்தினர் முனைவர் மு.செய்யது அலி பாதுஷா. உடன் இடமிருந்து முனைவர் த.செல்வராசு கைக்கூலி கைவிட்டோர் கழக ஆலோசகர் நாகூர் கனி, பள்ளியின் தலைமையாசிரியர் நா.பெ.முருகேசன். ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் இராஜமாணிக்கம் ஆகியோர்.